Most Rev. Nazarene Soosai Th. D.,D.D.
Bishop of Kottar

Bishop's House, P.B. No:17,
Asaripallam Road, Nagercoil - 629 001.
Kanniyakumari District, Tamil Nadu, India.

Phone : Off : +91 - 4652-278343, 279152, 279933
: Per : +91 - 4652-278868
Fax : +91 - 4652 - 278570
E-mail : kottardiocese@yahoo.co.in
Website : www.kottardiocese.org

No. C-03/2021 01.02.2021

# நினைவுத் திருப்பலி
# திருவிழா திருப்பலி

அன்பு அருட்பணியாளர்களே, சகோதரிகளே, சகோதரர்களே!

எளிமை வாழ்வைத் தேர்ந்தெடுத்து இறையாட்சிக்குச் சான்றாய் வாழ்ந்த இயேசுவின் பெயரால் உங்கள் எல்லோருக்கும் வாழ்த்துகள்.

கோவிட்-19 பெருந்தொற்றுக் காலத்திற்குப் பின்பு, புத்தியல்பு வாழ்க்கையின் ஓர் அம்சமாக நமது பங்குகளில் நடைபெறும் நினைவுத் திருப்பலிகள் குறித்து அருட்பணியாளர்கள் மத்தியில் ஏற்பட்ட ஒத்தக்கருத்தின் அடிப்படையில் பின்வரும் வழிமுறையினைக் கடைபிடிக்குமாறு உங்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

நம் உறவினர் ஒருவர் இறப்புக்குப் பின், நாம் விரும்பும் ஏதாவது ஒரு நாளில் மட்டும் மதியவேளைக்குப் பிறகு மூன்று அல்லது நான்கு மணியளவில் ஒரு நினைவுத் திருப்பலி நிகழ்த்திக் கொள்ளலாம். தற்பொழுது கடைபிடிக்கப்படும் காலைப் பொதுத் திருப்பலியையே நினைவுத் திருப்பலியாக ஒப்புக்கொடுக்க நாம் விரும்பினால் அவ்வாறே தொடர்வதற்கு எந்தத் தடையுமில்லை.

திருவிழா காலங்களில் நடைபெறும் திருப்பலிகளில் அதிக எண்ணிக்கையில் அருட்பணியாளர்களை அழைக்கின்ற அண்மைக்கால பழக்கத்தைத் தவிர்க்க வேண்டுமெனப் பரிந்துரைக்கின்றேன். அழைக்கப்பட்டவர்களில் திருப்பலிக்குத் தலைமையேற்கும் அருட்பணியாளருக்கும் மறையுரையாற்றும் அருட்பணியாளருக்கும் என இருவருக்கு மட்டுமே பயணப்படி வழங்குவதும் அழைக்கப்பட்டவர்கள் அனைவருக்கும் சுவையான, எளிமையான உணவு பரிமாறுவதும் போதுமானதே எனவும் அறிவிக்கின்றேன்.

திருவழிபாடுகளில் தேவையற்ற ஆடம்பரங்களையும் பொருள் செலவுகளையும் தவிர்க்கும் நோக்கமாகவே மேற்கூறியவற்றை கடைபிடிக்குமாறு உங்களை அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

கிறிஸ்துவின் மனநிலையில்,

+ Nazarene

**+ நசரேன் சூசை**

கோட்டாறு ஆயர்